C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 15 AUGUST 2023 ஆகாரம் : 07



உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்

## அவர் வல்லமையுள்ளவர்

## அவர் இரட்சிப்பார்

அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து

தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்

## அவர் உன்பேரில்

## கெம்பீரமாய்க் களிகூருவார்.

—செப்பனியா 3:17

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| 01-SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| 01-SAT<br>7.30 PM<br>9.00 PM | 1st & 3rd WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| WED<br>7.30 PM | BIBLE STUDY & PRAYER<br>PARSONAGE<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| THU<br>7.30 PM<br>8.30 PM | 4 TH THURSDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |

# From the Pastor's Desk



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள். கடந்த ஜூலை மாதம் 14 ஆம் தேதி அன்று ஆயரம்மா மற்றும் பிள்ளைகள் நம்முடன் வந்து திருச்சபை குடும்பத்தில் இணைந்து இறைப்பணி செய்ய அருள் புரிந்த ஆண்டவருக்கு துதிகளையும், திருச்சபையாருக்கு நன்றிகளையும் தெரிவிக்கிறேன்.**

நவம்பர் 28,1628 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்த ஜான் பனியன் (JOHN BUNYAN,1628—1688) அவர்கள் எழுதின நூல் 'மோட்சப் பயணம்' ஆகும். இன்றைய கிறிஸ்தவ உலகில் திருமறைக்கு அடுத்தபடியாக அச்சடிக்கப்பட்டு படிக்கப்பட்ட நூல் மோட்ச பயணம் ஆகும். இந்நூலின் சாரம் (JIST) என்னவென்றால் 'கிறிஸ்தியான்' என்பவர் தன் பாவச் சுமை எனும் மூட்டையை பல இன்னல்கள் இடையே சுமந்து சிலுவையை நோக்கி பயணிக்கிறார் விரைவில் 'சிலுவை'யைக் கண்டதும் அவரது பாவங்களில் இருந்து விடுதலை பெற்று மோட்சம் அடைகிறார். இதுவே மோட்ச பயணம் எனும் நூலின் கருத்து. ஆண்டவர் இயேசுவின் கிருபையால் கிடைக்கப்பெற்றத் திருமறையைப் படிப்போம், அதன் வழி வாழ்வோம். கர்த்தர் காயினை நோக்கி,உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? (ஆதி4:6) நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? (ஆதி4:7) உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே? (ஆதி4:9) என்ன செய்தாய்? (ஆதி4:10) என்ற ஆண்டவரின் அங்கலாய்ப்பான ஐந்து கேள்விகள், இவற்றிற்கு காயின் விடை கூற முடியாமல், ஆண்டவரிடம், என் சகோதரனுக்கு காவலாளியோ?(ஆதி4:10) என்று கேள்வி கேட்கிறார். ஆண்டவரின் அங்கலாய்ப்புக்கு காரணம், உன் சகோதரனின் இரத்தம் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக்கொண்டு இருக்கிறது. (YOUR BROTHER'S BLOOD CRIES OUT TO ME FROM THE GROUND) ஆனால், காயீன் அகிலத்தையும் படைத்த, சகலத்தையும் அறிந்த ஆண்டவரிடமே கேள்வியை கேட்கின்றார். பிரியமானவர்களே, மேற்கண்ட 5 கேள்விகளும் இன்றைய சூழலுக்கு அப்படியே பொருத்தமானதாகும் என்றால் அது மிகையாகாது. மிகக் குறிப்பாக உன் சகோதர சகோதரிகள் எங்கே? என்று ஆண்டவர் நம்மிடையே கேள்வியை எழுப்புகின்றார். காரணம் உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல்

உன் அயலானிடத்திலும் அன்பு கூருவாயாக(மாற்12:31) என்ற ஆண்டவரின் அன்பு கட்டளையை மனுக்குலம் மீறிவிட்டதே என்பதால்தான். நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? பாவம் உன் வீட்டு வாசற்படியிலே படுத்து இருக்கும் (ஆதி4:7) என்ன செய்தாய்? இன்றைய நாட்களில் இந்தியாவில் மணிப்பூர் மாநில சகோதர, சகோதரிகளின் அபயக் குரலும் , படுகொலை செய்யப்பட்டவர்களின் இரத்தமும் ஆண்டவர் இயேசுவை நோக்கி கதறுகிற இக்காலத்தில், மகனே—மகளே என்ன செய்கிறாய்? என்ற கேள்வியை ஆண்டவர் நம்மிடையே அங்கலாய்ப்புடன் எழுப்புகிறார்! காயீனைப் போல, நான் காவலாளியோ? என்று பொறுப்பில்லாத பதிலை கேள்வியாக எழுப்பப் போகிறோமா அல்லது ஆண்டவரின் துணையுடன் அப்படித் தேவையில் உள்ள மக்களுக்கான திருப்பணியினை செய்யப் போகிறோமா, சிந்திப்போம். மேற்கண்ட கேள்விகளுக்கு சரியான, முறையான விடைக் காணுவோம், ஆண்டவரின் வழி நடப்போம் ஆண்டவர் ஆசீர்வதிப்பார், ஆமென். கேள்விகள் தொடரும்......

**"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்."**

–மத்தேயு 25:40

**" Verily I say unto you, Inasmuch as ye have done it unto one of the least of these my brethren, ye have done it unto me."**

-Matthew 25:40

நன்றி!
ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.



அன்புடன்

*Rev. S.Baktha Thiyagarajan*



# மகதலேனா மரியாள்

கிறிஸ்துவுக்குள் அன்பான இறை அன்பர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

வாழ்த்துக்கள். கடந்த ஜூலை மாதம் 14 ஆம் தேதி முதல் குடும்பமாக இணைந்து திருப்பணி செய்ய வழி நடத்தின ஆண்டவருக்கு நன்றி.

புதிய ஏற்பாட்டில் மரியாள் என்ற பெயர் பலருக்கு இருப்பதால் இவர் தம் சொந்த ஊரான மகதலா என்ற பெயரோடு இணைத்து மகதலேனா மரியாள் என்று அழைக்கப்படுகிறார். இவரது பெயர் வேதத்தில் 16 முறை சொல்லப்படுகிறது. (மத்.27:56, மத்.61;28:1, மாற்.15:40,47; மாற்.16:1,8, லூக்.8:2; லூக்.24:10,13, யோ.19:25; யோ.20:1,11,15,16,18) எனவே இவர் எத்தனை முக்கியமானவர் என்பது தெரிகிறது.

**நலம் அடைந்தவர்:**

மகதலேனா மரியாள் ஏழு பிசாசுகளால் பிடிக்கப்பட்டு இவர் மிகவும் வேதனைப்பட்டவர், ஒரு நாள் இயேசு கிறிஸ்துவினால் இந்த ஏழு பிசாசுகளிடமிருந்து விடுதலை பெற்றவர். (லூக். 8:2) அதை அவர் சாதாரண சுகமாக எண்ணவில்லை, மாறாக கடவுளால் கிடைக்கப்பெற்ற மறுவாழ்வு என்று எண்ணி ஆண்டவரை துதித்தார். அனேகர் அந்நாட்களில் சுகம் பெற்று போனார்கள், ஆனால் மகதலேனா மரியாளோ நன்றியரிதலோடு ஆண்டவருக்கு பின் சென்றார்.

**நன்றியுடையவர்:**

இயேசுவை சந்திக்கும் முன்பு இவர் வாழ்க்கை பரிதாபமாக இருந்திருக்கும் ஆனால் இயேசுவை சந்தித்த பின்பு இவர்தான் வாழ்க்கை பளிச்சிடும் வெளிச்சமாக மாறியது. விடுதலை தந்த இயேசுவை மறக்காமல் நன்றியை வெளிப்படுத்த இயேசுவோடு பயணித்தவர். இவர் தம்மை அர்ப்பணிப்பதிலும், திருப்பணி ஆற்றுவதிலும் சிறந்து விளங்கினவர். இவர் தம் உழைப்பைக் கொடுத்ததோடு, உடைமைகளையும் கொடுத்தவர் (லூக் 8:2,3) மகதலேனா மரியாள் இயேசுவை சந்திக்கும் முன்னர் இருந்த வாழ்வும், ஆண்டவர் இயேசுவை சந்தித்த பின் மாறின வாழ்வுமே அநேகருக்கு சாட்சியானதாகும். (LIFE SPEAKS LOUDER THAN WORDS).

**நற்செய்தி அறிவித்தவர்:**

ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம் வரை துணிவுடன் சென்றவர். கவலையுடன், கண்ணீருடன் கண்டவர். (லூக்23:49) அடக்கம் செய்யும்போது உடனிருந்து உற்றுப் பார்த்தவர் (மாற்15:47) வாரத்தின் முதலாம் நாள் உயிர்த்தெழுந்த இயேசுவின் திருக்காட்சியை முதலில் பார்த்தவர். (மாற்16:9,10) கல்லறையின் அருகே அவர் அழுது கொண்டிருந்தபோது, இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை கேட்டவர் (யோவா20:11,12) உயிர்த்த இயேசுவுடன் உரையாடினவர் (யோவா20:14—16) இந்த நற்செய்தியை முதன் முதலில் சீடர்களுக்கு அறிவித்தவர் (யோவா20:17,18) தொடர்ந்து இவர் தன் வாழ்நாள் முழுமையும் ஆண்டவர் இயேசுவின் திருப்பணியை செய்தவர் என்றச் சான்றினை திருச்சபை வரலாற்றுச் செய்தி தெளிவாக தெரிவிக்கிறது. நிறைவாக, அன்பிற்கினியவர்களே நம் வாழ்வில் ஆண்டவர் இயேசுவின் வழியாக கிடைக்கப்பெற்ற இரட்சிப்பை அனைத்து விதமான விடுதலை வாழ்வை நினைத்துப் பார்ப்போம். ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி உள்ளவர்களாக இருப்போம், இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாக வாழும் நற்செய்திகளாக மாறுவோம். ஆண்டவர் இயேசு நம்மிடம் ஏன் அழுகிறாய்? யாரை தேடுகிறாய்? (யோவா20:15) என்று கேட்கிறார். ஆண்டவர் இயேசு நம்முடன் இருக்கிறார் என்பதை உணர்ந்து, அறிந்து அவரைப் பற்றிப் பிடித்து வாழ்வோம், ஆண்டவர் இயேசு நிறைவைத் தருவார், ஆசீர்வதிப்பார்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . B . Velankanni*






கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரனே! சகோதரியே! உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் கர்த்தர்தாமே இந்த மாதம் முழுவதும் நம்மோடு கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக இந்த மாதத்தில் வாக்குதத்தம் ஆக கர்த்தர் நம்மோடு பேச விரும்புகிற வசனம் 'இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்' (வெளி 3 : 8). தேவன் நமக்கு ஆவிக்குரிய திறந்த வாசலை வைத்திருக்கிறார். அடைப்பட்ட கதவை அல்ல. அது அடைபட்ட வாசலாக இருக்குமானால் நாம் கடந்துச் செல்லமுடியாது. நாம் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கவேண்டும். வாசலே ஒரு வீட்டிற்கு நுழைவு வாயில், வாசல் திறக்கப்படுமானால் நாம் அதின் வழியாக சென்று அந்த வீட்டின் எல்லா அறைகளுக்கும் செல்லமுடியும்.

அந்த அறையில் உள்ள எல்லவற்றையும் நாம் பார்க்கமுடியும். இங்கு திறந்து வைத்திருக்கிறேன் என்று சொல்லும்போது அவைகளை உனக்கென்றே வைத்திருக்கிறேன் என்று அர்த்தமாகும். நீ விருப்பமானவைகளை அங்கிருந்து எடுத்துச் செல்லலாம். உனக்கு இவைகள் அனைத்தும் இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவின் சுவிசேஷம் ஒரு மனிதனுக்கு மகாபெரிய பொக்கிஷசாலையை திறக்கிறது. அவன் இந்த சுவிசேஷத்தை ஏற்று வரும்போது, ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கும்போது இந்த பொக்கிஷசாலை அவனுக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொக்கிஷ சாலையில் ஒரு விசுவாசிக்குத் தேவையான அனைத்தும் இருக்கின்றன. இந்த உலகில் அவன் கிறிஸ்துவின் பிள்ளையாக வாழ, ஜீவிக்க தேவையான அனைத்தும் இருக்கிறது. ஆண்டவராகிய இயேசுவே இந்த போக்கிஷ சாலையாகவும் இருக்கிறார். 'அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்ப்புமானார்.' (1கொரி 1:31). அன்பான சகோதரனே! சகோதரியே! உனக்கு என்ன தேவையோ அவைகளை நீ இலவசமாய் எடுத்துக்கொள்ள திறந்திருக்கிற பொக்கிஷ சாலையை பார். உனக்கு, தேவனுக்கென்று சாட்சிபகர ஆவியானவரின் வல்லமைவேண்டுமா, பொறுமை, நீடிய சாந்தம் வேண்டுமா, பரிசுத்த வாழ்க்கை வேண்டுமா, உன் ஆவிக்குரிய வாழ்க்கையின் தேவை எதுவாக இருந்தாலும் விசுவாசத்தினால் அவைகளை எடுத்துக்கொள்ளலாம். நீ வெறுமையாய்த் திரும்பவேண்டிய அவசியமில்லை. இதைக்காட்டிலும் மேலானது உனக்கு என்ன வேண்டும்? இன்னும் தாமதியாமல் திறந்த வாசலில் பிரவேசி.

ARTICLE BY


MEN'S FELLOWSHIP



# அன்பு என்றால் என்ன?

Article by
SIS. MERCYLIN RAJESH
WOMEN'S FELLOWSHIP

உலகத்தில் அன்பைக் குறித்த போதனைகள் ஏராளம். எங்கும் அன்பின் தேவை அதிகமாக வற்புறுத்தப்படுகின்றன. இந்த வேளையில், அன்பு என்றால் என்ன என்பதை விளங்கிக் கொண்டவர்கள் வெகு சிலரே. இன்னொருவரிடத்தில் இசைவாக இருப்பதும், விருப்பமாக இருப்பதும்தான் அன்பு என்று எண்ணுகிறோம். ஆனால் அவைகள் அன்பின் சில அம்சங்களேயன்றி அவைகளே அன்பாகி விடாது.



> “இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.”
>
> 1 கொரிந்தியர் 13:13


1 கொரிந்தியர் 13–ம் அத்தியாயம் தான் அன்பு என்றால் என்ன என்பதை சரியாக விளக்குகின்றது. அந்த அத்தியாயத்தில் அன்பு என்றால் எவைகள் இருக்க வேண்டும், எவைகள் இருக்கக் கூடாது என்பதை தெளிவாக காண முடியும். நீடிய சாந்தம், தயவு, சகிப்புத்தன்மை, தாங்கும் பண்பு, விசுவாசம், நம்பிக்கை போன்றவை அன்புடையவர்களிடம் கலந்து இருக்க வேண்டும். பொறாமை, தற்புகழ்ச்சி, இறுமாப்பு, சினம், தீங்கு நினைத்தல், அநியாயத்தில் சந்தோஷப்படுதல் போன்றவை அன்புள்ளவர்களிடம் காணப்படக் கூடாது.

சில நேரங்களில் நம்மால் அன்பு கூரப்படும் ஒருவர் கொஞ்சம் நமக்கு வித்தியாசமாக போய்விட்டால், அவர்

மேல் உள்ள அன்பை நாம் விலக்கி விடுகிறோம். ஏனென்றால் நம்மிடம் உண்மையான தேவ அன்பு இல்லை. தேவ அன்பு இருந்தால் நீடிய சாந்தம், பொறுமை ஆகிய குணங்களை கடைபிடித்து மற்றவரை தொடர்ந்து நேசிக்க பிரயாசப்படுவோம். அது கடினமான காரியம் தான். ஆனால் அதுதான் தேவனின் பார்வையில் அன்பு. தேவ ஆவியின் பலத்தை நாடினால் அந்த அன்பு நம்முடைய சொந்த அனுபவமாக மாறும். தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்ட மனிதன் தேவ அன்பினை உலகத்திற்கு விளக்க முடியும்.


ஏனென்றால் அன்பு என்பது பல்வேறு குணாதிசயங்களாக வெளிப்படுகின்றவை ஆகும். பரிசுத்த ஆவியின் மூலமாக தேவன் தம்முடைய அன்பை நம்முடைய உள்ளங்களில் ஊற்றுகின்றார். அந்த அன்பினை முதலாவது நாம் நமக்குள் உணர வேண்டும். நமக்குள் தேவ அன்பினை அனுபவிப்பதன் அளவுகளைப் பொறுத்துதான், பிறரை உண்மையாக நேசிப்பதின் அளவுகள் இருக்கும். தேவன் அன்பானவர் என்ற புத்தக அறிவைக் கொண்டோ, பிறரை நேசிக்க வேண்டும் என்ற கட்டளையைக் குறித்த அறிவைக் கொண்டோ, பிறரை நேசித்து விட இயலாது.





# இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே

சகேயுவின் வாழ்க்கையில் அவனுடைய இந்த தேடுதலும் மாற்றமும் அவனை மாத்திரமல்ல, அவன் வீட்டாரையும் இரட்சிப்பிற்குள் வழி நடத்திற்று. சகேயுவின் வாழ்க்கையில் மெய்யாலுமே ஒரு பெரிய ஆவிக்குரிய தாகம் இருந்ததைப் பார்க்கிறோம். அருமையானவர்களே நம்முடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய தாகமும் தேடுதலும் இருக்கும்பொழுது நாம் நிச்சயமாக வெறுமையாய்ப் போக மாட்டோம். ஒருவேளை அவன் வீட்டில் அதிகப் பணமும் பொருளும் இருந்தபொழுது சந்தோஷம் சமாதானம் இருந்திருக்காது. ஆனால் இயேசு கிறிஸ்து அவன் வீட்டிற்குள் வந்தபொழுது மிகப்பெரிய ஒரு ஆசீர்வாதத்தைச் சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம். நம்முடைய வீடும் இரட்சிப்புவந்த வீடாக மாற வேண்டும் என்று வாஞ்சிக்கவேண்டும். மற்றவர்களின் பார்வையில்



> "இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்தவீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக்குமாரனாயிருக்கிறானே"
>
> —லூக்கா 19:9

நம்முடைய வாழ்க்கைஎவ்விதம் இருக்கிறது என்பதை விட, தேவனுடைய பார்வையில்நம்முடைய வாழ்க்கை எவ்விதமாக இருக்கிறது என்பதைநாம் நிதானித்துப் பார்ப்பது அவசியம். இயேசு கிறிஸ்து சகேயுவின் வீட்டிற்குவந்த காரணம் என்ன? — சகேயு மாத்திரமல்ல அவன் வீட்டாரும் இரட்சிக்கப்படவும் மெய்யான மாற்றமும் மறுமலர்ச்சியடையவும் அவர் விரும்பினார். அவர் அவ்விதமாகவே செய்தார்.

ARTICLE BY

YOUTH FELLOWSHIP




## How it Works




**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



**THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).**

**COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.**

# JULY WINNERS

## Find the way

- Ajin Shah
- Jessica Ashok
- Janet Thirsha
- Regan Shan
- Liana Ann Samuel

## Kids Colouring

- Reagan shan
- Sherin Sha
- Janet Zaharina
- Janet Thirsha
- Jessica Ashok

WELL DONE!

## Word Search

- Jessica Ashok
- Ajin Shah
- Smyrna

## Cross Word

- Sherin Shah
- Regan Shan
- Jemima.

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month - Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.



# LEVITICUS: 14-27

## லேவியராகமம்: 14-27

AUGUST '23 - QUESTIONS

QUIZ TIME?

1. தோஷம் நிறைந்த வீடு எத்தனை நாள் அடைத்து வைக்க வேண்டும்?
2. பிரமியம் உள்ளவன் தொட்ட மரச்சாமனை என்ன செய்ய வேண்டும்?
3. தங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்த வேண்டிய மாதம், தேதி எது?
4. ஆத்துமாவிற்காக பாவ நிவர்த்தி செய்கிறது எது?
5. உன் சந்ததியில் யாரையா கிலும் யாருக்கு தீக்கடுக்கும்படி இடங் கொடாதே?
6. உன்னில் நீ அன்பு கூருவது போல் பிறனிலும் அன்பு கூருவாயாக.
7. அஞ்சனம் பார்க்கிறவர்கள், குறி சொல்லுகிறவர்கள் என்ன செய்யப்பட வேண்டும்?
8. ஆசாரியர்கள் மேல் தேவனின் என்ன கிரீடம் இருக்கிறது?
9. கர்த்தருக்கு ஸ்தோத்திர பலியை எப்படி செலுத்த வேண்டும்?
10. அசைவாட்டும் காணிக்கையாக எத்தனை அப்பங்கள் கொடுக்க வேண்டும்?
11. கர்த்தரை நிந்தித்து தூஷித்தவனின் தாய் பெயர் என்ன?
12. யூபிலி வருஷம் எது?
13. ஒரே அடுப்பில் எத்தனை ஸ்திரீகள் அப்பம் சுடுவார்கள்?
14. இருபது கேரா எத்தனை சேக்கல்?

### ஜுலை- 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. லேவி: 1.11 | 2. லேவி: 2.11 | 3. லேவி: 3.17 | 4. லேவி: 4.28 | 5. லேவி: 5.11

6. லேவி: 6.9 | 7. லேவி: 7.20 | 8. லேவி: 8.9 | 9. லேவி: 9.9 | 10. லேவி: 10.12 | 11. லேவி: 11.22

12. லேவி: 12.5 | 13. லேவி: 13.45

திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. பானு அருண்குமார், திருமதி ரோஸ்லின் தமிழ்ச்செல்வி,

திருமதி. ஜெயின் அற்புதக்கனி, திருமதி. ரேனா ஜோஸ் செல்வகுமார், திருமதி. மன்ஜுஷா,

செல்வி. அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


Your Name / Bible Quiz / MAY'23 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name:

Date:

# Kids Coloring




## Find the Way

Name : ..............................................................

# THE STORY OF JOB

Lead Job through his pain and suffering.



# WORD SEARCH

Find the words listed below



## THE STORY OF JOB



Discover the hidden words.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S | I | B | T | J | Q | C | O | S | K | X | S | Q | Y | O |
| W | O | A | W | W | R | H | Y | V | A | V | B | X | L | R |
| O | R | R | D | I | E | I | P | S | Y | T | P | R | X | V |
| R | S | U | E | F | T | L | J | I | T | P | A | F | D | T |
| B | E | K | O | S | I | D | V | C | Q | D | I | N | H | N |
| L | L | J | G | F | O | R | R | K | V | B | C | R | X | E |
| E | U | I | E | C | S | E | E | R | M | D | E | A | T | H |
| S | E | I | B | C | E | N | E | N | P | E | O | Y | U | E |
| S | B | J | V | L | T | F | M | Q | G | O | D | S | R | S |
| I | S | X | E | O | N | I | A | K | Q | D | V | N | M | F |
| N | E | V | B | K | G | X | O | M | X | X | B | M | D | G |
| G | E | N | R | H | J | O | B | N | I | T | N | O | M | T |
| S | S | Y | I | Q | F | P | L | Q | Y | L | W | P | H | U |
| X | H | Q | C | N | F | A | I | T | H | T | Y | K | H | L |
| E | W | E | H | F | Q | R | U | D | Q | K | N | E | Z | I |

**Word Bank**


| | | |
|---|---|---|
| JOB | SATAN | SORES |
| RICH | FAITH | DEATH |
| FAMILY | CHILDREN | REJECTION |
| BLESSINGS | SICK | GOD |

Name : ................................................................

CROSS WORDS

Name : ........................................

# The Story of Job




**Across**

**4.** A great wind blew against the house and it fell down and killed all of Job's __________.

**5.** Job's ________ told him to curse God and die.

**7.** Job was blameless and ___________ before God.

**9.** After Job's trial was over, God gave him __________ as much as he had before.

**11.** After his trial, Job's friends came to comfort him and gave him a piece of silver and a _____ ring.

**12.** Before Job's troubles began he had _______ children.

**Down**

**1.** God said to Satan, "Have you considered my ________________ Job? There is no one like him on the earth?"

**2.** Satan made Job's body covered in ___________.

**3.** God asked Job many _____________ to help him understand that God can do all things.

**6.** Satan felt that Job loved God only because he had received so many ______from God.

**8.** God told Job to _________ for his friends who had not spoken what was right.

**10.** God has promised a __________ of life to all who endure testing! James 1:12

# AUGUST - 2023

| | |
|---|---|
| 01-AUG | Mr. S.Simeyon |
| 02-AUG | Mrs. Blessy Grace Jonish |
| 03-AUG | Mr. D.Rajavel |
| 09-AUG | Baby. Tisa Aavira Timotheus D/o Mr. Timotheus |
| 10-AUG | Mr. Enock Prabhakaran |
| 12-AUG | Mr. Jeremiah Kingston |
| 13-AUG | Mrs. D.Berlin Suniba |
| 14-AUG | Mastr. Jeremiah Alan S/o Mr. Suresh Rajan |
| 15-AUG | Mr. Y.Mesiah Das |
| 16-AUG | Mr. Derin Joy |
| 20-AUG | Mastr. Aldan Derick S/o Mr. Derick Gasbath Joy |
| 22-AUG | Mrs. S.Banu Priya |
| 24-AUG | Baby. Crasslin Devona D/o Mr. Rajesh ChellaDurai |
| 25-AUG | Mr. Livingston Samuel |
| 28-AUG | Mrs. Augusta Lawrence |
| 28-AUG | Baby. Joanna Stanly D/o Mr. Stanly G |
| 28-AUG | Mastr. Jerone Rimy S/o Mr. Rajesh Anbu |
| 28-AUG | Miss. Jeslin Rexcy D/o Mr. Rajesh Anbu |

*Wish you many more happy returns of the day God bless you all*

Wish you many more happy returns of the day God bless you all

| | |
|---|---|
| 29-AUG | Mrs. Preeda Nancy.R |
| 30-AUG | Mrs. Padma Joy |
| 31-AUG | Mrs. Vinolia Prasad |
| 31-AUG | Mrs. Anitha Rajan |

# AUGUST *Wedding* ANNIVERSARY

**18-AUG**
Mr. Derick Gasbath Joy
&
Mrs. John Gerald Sheeba Derick

**21-AUG**
Mr. M.C.Christopher
&
Mrs. Beeta Christopher

**23-AUG**
Mr. Jason Samuel
&
Mrs. Patricia Santhi

**26-AUG**
Mr. A. Yobu
&
Mrs. Anna Jothi

**29-AUG**
Mr. Pushparaj.B
&
Mrs. Biji Kumari.G.S

**29-AUG**
Mr. Lifin Raj.P
&
Mrs. Ashmitha Lifin Raj

**31-AUG**
Mr. Suresh Babu
&
Mrs. Abisha K.S




EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348

Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY